முத்துக்கள் சில...



சீ.மு. மீராஉம்மா முஸ்தபா

முத்துக்கள் சில...

சீ.மு. மீராஉம்மா முஸ்தபா

தலைப்பு : முத்துக்கள் சில...
பதிப்பு : 2022.07.30 / ஹிஜ்ரி 1444 முஹர்ரம் 01
அளவு : A6
பக்கங்கள் : 16
பதிப்புரிமை : மாற்றம் செய்யாது மீள் பதிப்பு செய்ய அல்லது பகிர்ந்து கொள்ள அனுமதிக்கப்படுகிறது
விலை : இலவசம்
தொகுப்பு : சீ.மு. மீராஉம்மா முஸ்தபா
வெளியீடு : freelancepenworks.blogspot.com

மின்நூல் (PDF) தரவிறக்கம் :

முத்துக்கள் சில...

எல்லோருடைய இடத்தையும் தாய்க்கு வகிக்க முடியும் ஆனால் தாயின் இடத்தை எவராலும் வகிக்க முடியாது.

உங்கள் முற்றங்களை தூய்மையாக வைத்துக்கொள்ளுங்கள் அதனை யூதர்களைப்போன்று ஆக்கி விடாதீர்கள்.

மனிதர்கள் யாரிடத்திலும் எதற்காகவும் மன்றாடாதீர்கள்.

எனக்கு சுதந்திரத்தைத் தாருங்கள் அல்லது மரண தண்டனையைத் தாருங்கள்.

நன்மையைச் செய்யுங்கள் அதனை உடனேயே முடியுங்கள் யாருக்கென்றும் எதற்கென்றும் கேட்டுக்கொண்டிருக்காதீர்கள்.

தங்கள் பிள்ளைகள் தங்களுக்கு பெருமையைத் தேடித்தர வேண்டுமென்று எதிர்பார்ப்பதுதான் பெற்றோர் செய்யும் அடிப்படைத் தவறு.

அளவுடன் சாப்பிட்டு வாருங்கள் உங்கள் ஆரோக்கியத்தை கெடுக்கும் விதத்தில் கடுமையான நோய் எதுவும் உங்களை அண்டாது.

சாபமிடுதல் உண்மை பேசுபவனுக்கு அழகல்ல,
சாபமிடுதல் உண்மை பேசுபவனுக்கு அழகல்ல.

மற்றவர்களை குற்றங்காணுவது மற்றவர் குற்றங்களைத் தேடுவது மாபெரும் குற்றமாகும்.

கேலி செய்பவன் சுவர்க்கத்தின் வாடையைக் கூட நுகரமாட்டான்.

நீங்கள் நிமிர்ந்து இருக்க வேண்டும் மற்றவர்கள் நிமிர்துவதற்கு இடம் தரவே கூடாது.

நீங்கள் உங்கள் தாய்க்குக்கூட அடங்காவிட்டால் உங்களுக்காக சிறைக் கதவுகள் எப்போதும் திறந்தேயிருக்கும்.

கோபம் கொஞ்ச நேரப் பைத்தியம்.

தாயை யாருடனும் ஒப்பிடலாகாது ஏனெனில் அவள் ஒப்புவமை அற்றவள்.

உலகம் ஒரு காய்ந்த மரம் ஆகும் மனிதனே அதில் சாய்ந்து நிற்காதே.

உனது வாயிலிருந்து வரும் வார்த்தைகளை உன் காதுகள் கேட்கும்.

கணவரின் அன்பு பெண்ணின் வாழ்வு.

சாபம் என்பது மேலே எறியப்பட்ட கல்லைப் போன்றது அதை எறிந்தவன் தலைமீதே வந்து விழும்.

பிறரிடம் எதுவும் கேட்காதவனே உண்மையான பணக்காரன்.

அவசரம் பிசாசின் குணம்.

ஆசையில்லாத மனிதன் ஆதமின் மகனல்ல.

அநாதையின் கண்ணீர் ஆண்டவனிடம் செல்கிறது.

கஞ்சன் ஈச்ச மரத்திற்கு ஒப்பானவன் ஈச்சமரம் தன் இலைகளை உதிர்ப்பதில்லை.

நோயாளியின் சிறந்த நண்பன் அவனுடைய கட்டில்கள்தான்.

பணக்கார நட்பு உங்களை பிச்சைக்காரனாக்கும்.

புன்னகை இழந்தவரை நீங்கள் கண்டால் நீங்கள் ஒரு புன்னகையை அளியுங்கள்.

அன்பு வீட்டினுள்ளே விரல்களால் நடந்து வருகிறது திரும்பச் செல்லும்போது வீட்டைத் தகர்த்துக் கொண்டு செல்கிறது.

ஒருவனின் பரம்பரைக் குணத்தை மாற்ற முடியாது நாயை இராஜாவாக்கினால் அது சப்பாத்துக்களை உணவாக சாப்பிடுவதை விட்டுவிடாது.

மரணத்தைப்பற்றி அஞ்சத் தேவையில்லை மரணத்தோடு எங்கள் பிரச்சினைகள் வேதனைகள் துக்கங்கள் எல்லாம் முற்றுப் பெறுகின்றன.

பெரும் செல்வமும் மன நிறைவும் சேர்ந்திருப்பதில்லை.

கடந்து போன விஷயங்களில் சிந்தனையைச் செலுத்தி பொழுதைப் போக்குகிறவர்கள் தங்களைத் தாங்களே கேவலப்படுத்தி சிறியவர்களாக்கிக் கொள்கிறார்கள்.

மனிதர்களின் கைகளில் உள்ளவற்றை நீ பெறாதிருக்கும் வரை அவர்கள் உன்னை மதிப்பார்கள் அவ்வாறின்றி நீ பெறத்தொடங்கிவிட்டாலோ உன்னை இழிவாக நினைப்பார்கள் உன் பேச்சை வெறுப்பார்கள்.

நிச்சயமாக துன்பத்திற்கு பின் இன்பம் உண்டு (இன்னும்) நிச்சயமாக துன்பத்திற்குப் பிறகு இன்பம் உண்டு.

கூர்ந்து கவனிக்காத ஒருவன் காட்டின் நடுவே சென்றாலும் அவனது கண்களுக்கு மரமே தென்படவில்லை என்பான்.

நீ உனக்கு இழப்பை ஏற்படுத்திக் கொள்ளாதே நீ மாத்திரமே உனக்கு இருக்கிறாய்.

நேரம் பறந்து விடும் அதன் விமான ஓட்டி நீங்களே என்பதனை மறந்து விடாதீர்கள்.

உழைப்பு உடலைப் பலப்படுத்தும் கஷ்டங்கள் மனதைப் பலப்படுத்தும்.

பேச்சு வெள்ளி மௌனம் தங்கம்.

அறிவைத் தனியாக இருந்து
உயர்த்திக் கொள்ளலாம் நல்ல
பழக்க வழக்கங்களை மக்களோடு பழகித்தான்
ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

பெருமை தேவதையைக் கூட
பிசாசாக்கிவிடும்.

முதல் நாள் விருந்தாளி, இரண்டாம் நாள்
பாரம், மூன்றாம் நாள் அட்டை.

கெட்டவர்கள் தங்கள் தவறுகளுக்கு காரணம்
தேடுவார்கள் நல்லவர்களோ தவறுகளை விட்டு
விலகுவது எப்படி என்று சிந்திப்பார்கள்.

ஆணுக்கு உலகமெல்லாம் வீடு
பெண்ணுக்கு வீடுதான் உலகம்.

சின்னப் பரிசும் இரும்பு இதயங்களைத்
தகர்த்துவிடும்.

நாக்கு ஒரு கொடிய மிருகம் ஒரு முறை
அவிழ்த்துவிட்டால் கட்டுவது கடினம்.

தாய் உன்னை இறைவனிடம் முறையிட
வைத்துக்கொள்ளாதே.

உன் வீட்டு இரகசியங்களை வெளியே கூறாதே.

நாவால் அடிபடுவதை விட காலால்
அடிபடுவது மேல்.

பெற்றோரை மகிழ்வித்தல் இம்மையில் செல்வத்தையும் மறுமையில் ஈடேற்றத்தையும் தேடித்தரும்.

கடந்துவிட்ட காலம் திரும்பி வருவதில்லை எனவே காலத்தைக் காட்டிலும் பிரியமானதும் விலை மதிக்க முடியாததும் வேறு ஒன்றுமில்லை.

பெண்கள் அழகான மலர்களாவர் அவர்களை இரக்க சுபாவத்தோடும் அன்போடும் நல்ல ஒரு நண்பனைப் போன்றும் நடத்துங்கள்.

உங்கள் வாழ்க்கையை சமாதானமாகவும் தூய்மையாகவும் வைத்துக்கொள்ளுங்கள்.

குழந்தை மரணித்துவிட்டாலோ நிம்மதியாகத் தூங்குவான் ஆனால் செல்வம் போனாலோ தூங்கமாட்டான்.

சொர்க்கத்தை அடையவிரும்புபவர்கள் தம் பெற்றோரை மகிழ்விக்கவும்.

கஞ்சத்தனம் ஷைத்தானின் குணமாகும்.

கஞ்சன் சதிகாரன் கொடுத்த தர்மத்தை சொல்லிக்காட்டுபவன் ஆகியோர் சொர்க்கம் நுழைய முடியாது.

மூன்று காரியங்கள் மறுமையின் நற்குணத்தைச் சார்ந்தன. 1. உறவுகள் உன்னை வெறுத்தாலும் நீ உறவாட வேண்டும், 2. உனக்கு அநீதம் செய்தவனை நீ மறந்துவிட வேண்டும்.
3. அறியாமையினால் ஏற்பட்ட தீங்குகளை பொறுத்துக் கொள்ள வேண்டும்.

கடுகளவும் பெருமை கொண்டவன் சுவர்க்கம் புக மாட்டான்.

இம்மையில் நிம்மதியும் மறுமையில் வெற்றியும் பெற உன் நாவை அடக்கி வை.

பேராசை பேணுதலை அழித்து விடுகிறது.

அதிகமான பேச்சு உன் இதயத்தை இருளாக்கிவிடும்.

நீண்ட நேரம் நாவை அடக்கிக்கொள் அது ஷைத்தானை விரட்டிவிடும், உனது மார்க்க விடயத்தில் துணையாக இருக்கும்.

பூமியில் பயனற்ற காரியங்கள் மூன்று,

1. பயனற்ற மண்ணில் பெய்த மழை,

2. குருடனை மணந்த அழகி,

3. நன்றி கெட்டவனுக்குச் செய்த நற்காரியம்.

தான் செய்த உபகாரத்தை சொல்லிக் காட்டி விளம்பரம் செய்தவன் சுவர்க்கம் புக மாட்டான்.

நிறை கண்டால் போற்று குறை கண்டால் ஒன்றும் கூறாதே.

சிறிய காரியத்தையும் ஏழை உறவினர்களையும் புறக்கணிக்காதீர்.

அன்பு தானாக வருவது அதை விலைக்கு வாங்க முடியாது

ஒரு பெற்றோர் பத்துக் குழந்தைகளை பெற்று வளர்த்து ஆளாக்கலாம் ஆனால் பத்துக் குழந்தைகளும் பெற்றோரை பராமரிக்காது

மல்யுத்த வீரன் வீரனல்ல தன்கோபத்தை அடக்குபவனே உண்மையான வீரன்

இறைத்தூதர் அவர்களிடம் ஒரு மனிதர் நான் நல்ல விதமாக நடந்துகொள்ள அனைவரையும் விட அதிக உரிமை பெற்றவர் யார் எனக் கேட்க அதற்கு நபி (ஸல்) அவர்கள் உன்னுடைய அன்னையே எல்லோரையும் விட அதிக உரிமை பெற்றவர் என பதிலளித்தார்கள், கேள்வி கேட்டவர் அதற்கு பிறகு யார் எனக் கேட்க நபி (ஸல்) அவர்கள் உன்னுடைய அன்னைதான் என பதிலளித்தார்கள், மீண்டும் கேள்வி கேட்டவர் அதற்கு பிறகு யார் எனக் கேட்க நபி (ஸல்) அவர்கள் உன்னுடைய அன்னைதான் என பதிலளித்தார்கள், மீண்டும் கேள்வி கேட்டவர் அதற்கு பிறகு யார் எனக் கேட்க நபி (ஸல்) அவர்கள் உன்னுடைய தந்தையும் அதற்கு அடுத்ததாக உனது நெருங்கிய உறவினர்களிடமும் நல்லவிதமாக நீ நடந்துகொள்ள வேண்டும் என கூறினார்கள்.

நம் வாழ்வின் பல கட்டங்கள் மறக்கமுடியாத படிப்பினைகளை எமக்கு கற்றுத்தருவதுண்டு. உதாரணமாக நாம் சமூகத்தோடு இணையும் போது எமக்கு பலவித அங்கீகாரங்கள் கிடைக்கும். சிலர் எம்மை தாழ்வாக நோக்குவர் சிலர் எமக்கு மரியாதை செய்து அன்புடன் பழகுவர். நாம் எமது நிலையறிந்து எமது நிலைக்குப் பொருத்தமானவர்களுடன் பழகுவோமானால் பிறரால் நாம் மனம் வருந்துவதிலிருந்து எம்மை பாதுகாக்கலாம். அவ்வாறானவர்களை அறிந்துகொள்ள சமூகத்தோடு பழகி சில மனவருத்தங்களை சந்தித்துத்தான் ஆகவேண்டும்.

எத்தனை புத்தகங்களைப் படித்தாலும் அனுபவத்தில் கற்றதைப்போன்று ஆகாது ஆனால் படித்தறிந்த வற்றைக்கொண்டு அனுபவத்தைப் பெறும்போது அதனால் ஏற்படும் தாக்கத்தை ஓரளவுக்கேனும் குறைக்கலாம்.

முடியுமான அளவு நாம் பிறருக்கு எவ்வித எதிர்பார்ப்பும் உள்நோக்கமும் இன்றி உதவிசெய்ய வேண்டும் அதே நேரம் பிறரிம் உதவிகேட்பதை தவிர்ந்துகொள்ள வேண்டும் இவற்றுடன் நற்குணங்களையும் சேர்த்து எமது சந்ததியினருக்கு கற்றுக்கொடுக்க வேண்டும்.

வாழ்விற்கு அவசியமான உபதேசங்களைக் கொண்ட புத்தகங்கள் ஏராளம் உள்ளன. அவற்றில் சிலவற்றிலிருந்து என்னால் அனுபவித்து, படித்து தொகுக்கப்பட்டவற்றை நூல் வடிவாக்கியுள்ளேன். இதனை வாசித்து சிந்தித்து பயன்பெறுவதோடு பிறரையும் பயனடையச் செய்யுங்கள்.

தொகுப்பாளர்.